உ

" பழம்பிள்ளை பாதம் பரவப் பரவ
வளங் கொள்ளும் வாழ்த்தும் மனம் "



மல்லையம் பதியிலே பிறந்து

இறைவன் திருவடி சேர்ந்த

அமரர்

## செல்வி குமுதினி சண்முகசாமி

அவர்களின்

# நினைவு மலர்

10-5-92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# செல்வி குமுதினி சண்முகசாமி

அவர்கள்

மண்ணில் மலர்வு :
21-07-1967

விண்ணில் அமர்வு
10-04-1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் வளப்பம்

சொர்ணத் திவு என சிறப்பித்துப் போற்றப்படும் ஈழவள நாட்டிலே வடபால் அமைந்து வளம்பல கொண்டு திறம்பல விளங்கும் யாழ் குடாநாட்டிலே பழம்பதிகள் பலதுள் நலம்பல கொண்டு நாளும் விளங்குவது மாவை என்னும் பதியாகும். இப்பதியின் பகுதியிலே ஊரார் போற்ற சிறப்புடன் வாழ்ந்தனர் பேரம்பலம் அன்னப்பிள்ளை தம்பதியினர். பூவும் மணமும் போன்று பொலிவுடன் தொடர்ந்தது அவர்கள் இல்வாழ்வு நல்லறமாகிய இல்லற வாழ்வின் சொல்லரிய பேறாக நன்மக்கள் நால்வரை தமக்கெனக் கொண்டனர். சண்முகசாமி, சிவசாமி என ஆசையுடன் பேசப்படும் ஆண்மக்கள் இருவரும் புஷ்பவதி, பரமேஸ்வரி என அன்புடன் அழைக்கும் பெண்பிள்ளை இருவரும் என நான்கு முத்துக்களை தமது வாழ்வின் சேர்த்த பெரும் சொத்துக்களாகக் கண்டார்கள். 1944-ம் ஆண்டு மனைவியார் காலம் சென்றுவிடவே மல்லையம்பதியைச் சேர்ந்த செல்வி சரஸ்வதி சின்னத்தம்பியை மறுமணம் புரிந்தார். அவர்களின் நல்வாழ்க்கையில் இரு பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். ஏகபுத்திரனாகிய இராமநாதனும் ஆசைக்கோர் மகள் அருள்ஞானசோதியும் பெருமைக்குரிய பிள்ளைகளாகப் பெற்றனர். இவர்களில் மூத்தோனாகிய சண்முகசாமிக்கு ஆரம்பக் கல்வியினை யாழ் இந்துக் கல்லூரியில் பயிற்றுவித்தனர், காளைப் பருவத்தே கல்வியை நிறைவு செய்துகொண்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் (வவுனியா) ஓவசியராகக் கடமையாற்றினார். உரிய பருவத்தை உற்றனன் மைந்தன் என்றறிந்த பெற்றோரும் மல்லையம் பதியில் குலப்பெருமை மிகுந்த கந்தையா சிவக்கொழுந்து தம்பதியினரின் மூத்த புத்திரியாகிய அன்னலட்சுமி என்னும் நற்கன்னிகையினை 1963ல் அவருக்கு மணம் புரிவித்தனர்.

சண்முகசாமி அன்னலட்சுமி தம்பதியினர் நகமும் சதையும் போன்று நனி சிறந்தவர் வாழ்க்கையிலே பொலிவுடன் தொடர்ந்தது அவர்கள் இல்வாழ்வு. இயல்புடைய இல்வாழ்வில் இனிமைகள் பல கண்டனர். பல் தொழில் சிறந்து பலரும் புகழ வாழ்வை நடாத்தினார்கள். நல்லறமாகிய இல்வாழ்வில் நன்மக்கள் நால்வரை நாட்டுக்குத் தந்தனர். அவர்களின் குடும்பத்திலே மூன்றாவது பிள்ளையாய் குலத்தின் கோமகளாய் திகழ்ந்தாள் அமரர் செல்வி குமுதினி சண்முகசாமி.

அக்காமாராகிய தயாளினி, நந்தினியும் தங்கை றோகினியும் இணையில்லா உடன் பிறப்புக்களாய் திகழ சிறு பராயத்திலே செப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடன் தான் வளர்ந்தாள். கல்வியே கருந்தனம் என்ற முதுமொழிக் கிணங்க தமது ஆரம்பக் கல்வியினை யா / மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியினை யா/இராமநாதன் கல்லூரியிலும் பயின்ற பின்னர் இவர் ஒரு வருட காலமாக மல்லைநகர் சிறு பிள்ளைகளின் அறிவினை புகட்டும் பொருட்டு நாமகள் பாலர் பாடசாலையினை நடாத்தத் தொடங்கினார். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதை உணர்ந்து தமது பிள்ளைகட்கு இளமைப் பருவத்தே வேண்டிய கல்வி அறிவினைப் புகட்டுவித்தார்.

நிறைமலர் என பொலிவுடன் திகழ்ந்த தமது மூத்த சகோதரி செல்வி தயாளினி உரிய காலத்தில் சுப்பிரமணியம் என்னும் இளவலை திருமணஞ் செய்தார். அவர்கள் தமது வாழ்வில் புத்திரர்கள் இருவரை தனேந்திரன், கிருபாகரன் ஆகியோரை தமது பெருமைக்குரிய மகன்களாக பெற்றனர். அவரது இரண்டாவது சகோதரி செல்வி நந்தினி இராசேந்திரனை திருமணம் செய்தார். அவர்களுக்கோர் அருமைப் புதல்வியாக செல்வி பிரியதர்ஷினி வந்துதித்தார். ஒரு மாத காலத்திலே இழந்த பிரியதர்ஷினியின் மறைவையிட்டு பெருங் கவலை கொண்டாள். அருமைத் தங்கை றோகினி மண்ணின் மீட்புக்காய் புறப்பட்டதையிட்டு பெருமிதம் கொண்டாள். எனினும் காலத்தின் கோலங்களை கையாலே மறைத்தல் கனவிலுங் கடிது என்று மீண்டும் மன அமைதி கொண்டாள். இவ்வாறு அல்லும் பகலும் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் காய்ச்சல் என்னும் நோயினால் அவதியுற்றாள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பின் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நாளை சொற்ப நாட்களில் எதிர்பார்த்தாள். இவ்வாறு அரனடி நினைவாய் தம் காலத்தைக் கழித்த அமரர் செல்வி குமுதினி சண்முகசாமி அவரது 25வது வயதில் 10-4-92ல் ஆண்டவன் தனது பாதத்திலே சேர்த்துக் கொண்டாள்.

வாழ்க்கை அரும்பாகி மொட்டாகி விரியும் வேளையில் ஊழ் குறுக்கிட்டு விட்டதே. ஒரு இளம் பெண்ணுக்குரிய மேன்மையான எல்லா அம்சங்களும் பொருந்தியவரே செல்வி குமுதினி. வாழ வேண்டிய பெண்மலர் வாடிப் போனதே.

உத்தமி ஒருத்தியின் ஆவி வரக்கண்டு உயர் விண்ணுலகு மகிழ்வடைந்தது.

சுபம் ! சுபம் !! சுபம்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் புலம்பல்

கட்டி அணைத்து நீ முத்தம் கொடுத்ததும்;
கவலை மறந்து நாம் உள்ளம் குளிர்ந்ததும்,
துள்ளிச் சென்று நீ பாலர் பாடசாலை செல்லுகையில்
"போயிற்று வாரேன் அம்மா" என்பதும்
எண்ண முடியுதில்லை, நெஞ்சில் இரத்தம் பாயுதடி,
அள்ளி உனக்கொரு கொள்ளியிட்டோம்.
ஆனால் அம்மா இட்ட கொள்ளியில்
நித்தம் எம்மை எரிக்கின்றோம்.

## சகோதரிகள் புலம்பல்

அன்பு, பண்பு, பாசம், அறிவு, விடாமுயற்சி அத்தனையும் நிறைந்த இனிய குஞ்சுவே! எங்கே சென்றாய்? பல வருட காலம் எம்முடன் கூடி வாழ்ந்து கோடி காலம் இன்பம் தருவீர் என்றும் உன்னை மணக் கோலத்தில் பார்க்க இருந்த எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றுவிட்டாய்?

## மச்சாள்மாரின் இரங்கற் செய்தி

வாழ்வின் பாதையில் பலரைச் சந்திக்கின்றோம், சிலரை ஞாபகப்படுத்திக் கொள்கின்றோம், சிலரை மறந்து விடுகின்றோம். ஆனால் அருமையாக ஒரு சிலரைப்பற்றி மீண்டும் மீண்டும் சிந்திக்கின்றோம், அத்தகையவர்களில் ஒருத்தியான மச்சாள் அமரர் குமுதினி (குஞ்சு) ஆவாள். அவளது செவ்விய தன்மை பற்றி அறியக் கிடைத்ததோ மனதுக்கு இனிமை தருவது அமைதியான ஆற்றொழுக்கான சுபாவம் அன்பான நோக்கு, கனிவான போக்கு இவை பக்கலில் செல்வோரை இயல்பாக கவர்ந்திழுக்கும். நல்ல மனிதர்கள் நம்மோடு நீண்டநாள் நிலைப்பதில்லை, அவர்கள் தேவர் உலகின் நல்விருந்தாளிகள். இவ்வுலகில் அவர்களின் வாழ்வு நமக்கு ஓர் உதாரணம். அவளது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றத்தார் இரங்கல்

ஊரின் நடுவியோர் உள்ள நல்ல மடு நீ
பாழும் கனல் வனத்தியோர் பயன்தரும் சோலை நீ
நாளும் உன்நிழலில் வந்து சுகம்தேடும் நாம்
ஏதும் இடமின்றி ஒடுங்குகின்றோம் உன்னையெண்ணி.

## தேற்றம்

பிரமனுக்கும் இல்லை பிற்பகல் நிச்சயம்
இயமனுக்கும் உண்டு அழிவது ஒரு சமயம்
பரமனுக்கு அன்பு கொண்டு காலத்தை கரைத்திட்டால்
காலனுக்கும் கவலையில்லை காண்பை யின்றுநீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# தோத்திரப் பாடல்கள்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருவாசகம்

செம்மை நலமறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மை மல மறுவித்து முதலாய முதல்வன் றான்
நன்மையுமோர் பொருளாக்கி நகைய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை யெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிர வென்கண் குளிர்ந்தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

தந்தையைத் தாளற வீசிய சண்டிக்கு
மண்டத் தொரு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளிச்
சோதிமணி முடித் தாமமுநாமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வானுலகு மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மை தருசெய்ய தமிழ்பார் மிசை விளங்க
ஞானமத ஐந்து கரமூன்று விழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவியஞ்சலி செய்கிற்பாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே

## பட்டினத்தார் பாடல்

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றான் சதம் கச்சியேகம்பனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருத்தி

## பேரம்பலம் — அன்னப்பிள்ளை — சரஸ்வதி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சண்முகசாமி | சிவசாமி | புஸ்பவதி | பரமேஸ்வரி | இராமநாதன் | அருள்ஞானசோதி |
| அன்னலட்சுமி | சோதிமலர் | இரத்தினசிங்கம் | மாட்டின் | இந்திராணி | பூலோகநாதன் |
| | | சுரேஸ்குமார் | அன்ரன் | டினேஸ் | கிருபாகரன் |
| | | சுரேந்தினி, சுதர்சினி | பரதன், மாட்டின் | டிலேந்தி | மோகனா |
| | | சுகந்தினி, சுபாசினி | | | |

## கந்தையா — சிவக்கொழுந்து

| | | | |
|---|---|---|---|
| நடராசா | அன்னலட்சுமி | நித்தியலட்சுமி | ஞானதேவி |
| தையல்நாயகி | சண்முகசாமி | விஜயராமன் | தியாகராசா |
| தவபாலன், வதனி | | சுரேஷ் | கமலினி |
| கஜபாலன், ஜனனி | | உமேஷ் | தினேஷ் |

## சண்முகசாமி — அன்னலட்சுமி

| | | | |
|---|---|---|---|
| தயாளினி | நந்தினி | குமுதினி | றோகினி |
| சுப்பிரமணியம் | இராஜேந்திரன் | | |
| தனேந்திரன், கிருபாகரன் | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தெய்வத்தின் திடீர் மரணத்தை முன்னிட்டு
இறுதிக் கிரிகை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டும்
பேருதவி நல்கி சிறப்பித்தோருக்கும் அவரது
அந்தியேட்டிக் கிரிகைகளில் கலந்து கொண்டு
சிறப்பித்தோருக்கும் அன்பு நிறைந்த
எமது நன்றி அறிதலை நவின்று கொள்கின்றோம்.

வணக்கங்கள் பல

நன்றி.

இங்ஙனம்
தந்தை, தாய்,
சகோதரிகள், மச்சாள்மார்,
உற்றார், உறவினர்கள்.

புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.

சாந்தினி அச்சகம், மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org